[Public]

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

ரூ. 100,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளை வழங்கல்

11.00%2030 'A' தொடரின் கீழ் ரூ. 40,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள், 11.70%2034 'A' தொடரின் கீழ் ரூ. 40,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் மற்றும் 10.85%2036 'A' தொடரின் கீழ் ரூ. 20,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் 2026 ஒக்டோபர் 29 ஆம் திகதி இடம்பெறும் ஏலமொன்றின் மூலம் வழங்கப்படவுள்ளன.

திறைசேரி முறி வழங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன

தொடர்	**11.00%2030 'A'**	**11.70%2034 'A'**	**10.85%2036 'A'**
ஐஎஸ்ஐஎன்*	LKB01530E152	LKB00934J156	LKB01136H151
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	ரூ. 40,000 மில்லியன்	ரூ. 40,000 மில்லியன்	ரூ. 20,000 மில்லியன்
நறுக்கு வீதம்	வருடமொன்றுக்கு 11.00%	வருடமொன்றுக்கு 11.70%	வருடமொன்றுக்கு 10.85%
வழங்கப்படும் திகதி	15 மே 2015	15 ஒக்டோபர் 2025	15 ஆகஸ்ட் 2025
முதிர்வுத் திகதி	**15 மே 2030**	**15 ஒக்டோபர் 2034**	**15 ஆகஸ்ட் 2036**
நறுக்கு கொடுப்பனவுத் திகதி	15 மே மற்றும் 15 நவம்பர்	15 ஏப்ரல் மற்றும் 15 ஒக்டோபர்	15 பெப்ரவரி மற்றும் 15 ஆகஸ்ட்
ஒன்றுசேர்ந்த வட்டித் தொகை	ரூ. 100.00 இற்கு ரூ. 5.1114	ரூ. 100.00 இற்கு ரூ. 0.5786	ரூ. 100.00 இற்கு ரூ. 2.3292
ஏல விற்பனைத் திகதி	2026 ஒக்டோபர் 29, வியாழக்கிழமை		
விலைக்குறிப்பீடு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியும் நேரமும்	2026 ஒக்டோபர் 29, வியாழக்கிழமை 11.00 மு.ப.		
தீர்ப்பனவுத் திகதி	**2026 நவம்பர் 02**		
விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை	ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்கள்.		

திறைசேரி முறிகளில் முதனிலை வணிகர்களிடமிருந்து உன்மை விலைகளின் அடிப்படையில் (கடைசி நறுக்கு கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவுத் திகதி வரை ஒன்றுசேர்ந்த வட்டியைத் தவிர்த்து) விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்சத் தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

முதனிலை வணிகர்களின் பட்டியல்

இலங்கை வங்கி	2541938	என்.எஸ்.பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட்	2425010
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி	2317777	மக்கள் வங்கி	2206783
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319	சம்பத் வங்கி பிஎல்சி	2305842
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி	2639883	செலான் வங்கி பிஎல்சி	2456340
எச்.என்.பீ செக்குரிட்டீஸ் லிமிடெட்	2206297	வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட்	2675096

சந்தை நிலவரங்களைப் பொறுத்து வழங்கப்படும் தொகையை விஞ்சாத எந்தவொரு தொகையையும் ஒவ்வொரு தொடர் தொடர்பாகவும்/ ஐஎஸ்ஐஎன், இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

வழங்கல் அலுவலகம்
பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
செயலகம், கொழும்பு 1.
தொலைபேசி: +94 112 484 604
இணையதளம்: www.treasury.gov.lk

உதேனி உடுகஹபத்துவ
பணிப்பாளர் நாயகம்
பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்